# சரிந்த மரம் 50 ஆண்டுகளுக்கு மேலானது



கோலாலம்பூர், மே 8- ஜாலான் சுல்தான் இஸ்மாயில் சாலையில் நேற்று வேரோடு சாய்ந்த மரம் 50 ஆண்டுகளுக்கு மேலானது எனக் கண்டறியப்பட்டுள்ளது. கோலாலம்பூரில் உள்ள மரங்களைப் பரிசோதனை செய்யும் பணிகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அடிக்கடி மேற்கொண்டு வருகிறது.

ஈராண்டுகளுக்கு ஒரு முறை கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலேஹா முஸ்தபா தெரிவித்தார்.

அந்த மரம் பழைமையானது, 50 ஆண்டுகளுக்கும் மேலானது. அந்த மரம் தனியார் நிறுவனக் கண்காணிப்பின் கீழ் இருக்கிறது. அதேபோல் தலைநகரில் 50இல் இருந்து 80 ஆண்டுகள் வயதுடைய மரங்கள் நிறைய இருப்பதையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

எனவே பொதுமக்கள் பாதுகாப்புக்காக வயதான இந்த மரங்களை அகற்றுவதற்கு முன்னெடுக்கக்கூடிய திட்ட வரைவை கோலாலம்பூர் மாநகர் மன்றம் பரிசீலனை செய்யும். தலைநகரில் உள்ள மிகவும் வயதான மரங்களை அடையாளம் காண்பதற்கு கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இப்போதைக்கு வயதான மரங்கள் குறித்த கூடுதல் தகவல்கள் நம்மிடம் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

இதனிடையே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்த பேச்சுவார்த்தை இன்னும் நடைபெறுவதாகவும் அமைச்சர் நேற்று மாலை குறிப்பிட்டார்.

